**பண்டாரவளை பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பண்டாரவளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பண்டாரவளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப்பெறுமதி ரூபா 139,610,519 ஆன 03 சொத்து விடயங்கள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை, நாளதுவரையான பதிவேடு, பட்டோலை மற்றும் நாளதுவரையான நிலையான சொத்துப் பதிவேடு சமர்ப்பிக்காமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | கட்டிடங்களை மதிப்பீடு செய்து சரியான பெறுமதியை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் படுகின்ற மீதிகள் தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| 149 ஆம் பிரிவு | பிரதேச சபையினால் இனங்காணப்பட்ட சுற்றுலா | வரித்தொகையை அறவிடுவதற்கு | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபையில் பதிவு செய்த 04 ஹோட்டல்களில் இருந்து வரித்தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 | சபைக்குரிய 08 வாகனங்களில் அரசாங்க இலட்சினை இடுவதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் பெயர் வாகனத்தின் வெளிப்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | இலட்சினையை அச்சிடுவதற்கு கூறுவிலை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2022 சனவரி 27 ஆம் திகதிய இலக்கம் 2264/18 என்ற வர்த்தமானி பத்திரம் | பிரதேச சபை எல்லையில் அமுல்படுத்தப்பட்ட 14 நிர்மாணங்கள் தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. | 12 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை மற்றும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,806,732 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,813,638 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 604,950 | 665,800 | 407,036 | 258,763 | 557,670 | 600,143 | 454,741 | 145,402 |
| **(ii)** | வாடகை | 216,000 | 5,592,310 | 5,592,310 | - | - | - | - | - |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 350,000 | 423,750 | 423,750 | - | 350,000 | 357,800 | 357,800 | - |
| **(iv)** | ஏனைய வருமானம் | 6,584,000 | 12,821,541 | 6,297,651 | 6,523,890 | 2,750,000 | 6,529,359 | 5,521,965 | 1,007,394 |
| | மொத்தம் | **7,754,950** | **19,503,401** | **12,720,747** | **6,782,653** | **3,657,670** | **7,487,302** | **6,334,506** | **1,152,796** |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காாண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாடற்ற நீர் செயற்திட்டத்தில் இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 480,055 நீர் கட்டணத்தை அறவிடுவதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடயப்பொறுப்பு அமைச்சருக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காலரீதியில் நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 15,973,977 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,803,419 என்பன பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவையை அறவிடுவதற்கு ஆளுநருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் அமைச்சிலும் மற்றும் LDSP செயற்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளில் இருந்தும் ரூபா 26,833,705 செலவில் 2023 ஆம் ஆண்டின் போது பொறோகல சுற்றுலா நிலையத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டு பார்வையாளர் நிலையமாக பொது மக்களுக்கு திறந்துவைக்கப்பட்டிருந்தது. இந்த செயற் திட்டத்திற்குரிய செயற்திட்ட முன்மொழிவொன்றின் அடிப்படையில் மொத்தக் கிரய மதிப்பீடு மற்றும் முறையான திட்டம் என்பன தயாரிக்கப்படாதிருந்ததுடன் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | தற்போது முழுமையாக நிலத்திற்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | நீண்டகால செயற்திட்டங்களை அமுல்படுத்தும் போது அதற்காக முறையான திட்டமொன்று தயாரித்து அதனை அங்கீகரிக்க வேண்டி இருந்ததுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது மொனறாகல பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளரால் சபைக்கு வழங்கப்பட்ட நோயாளர் காவும் வண்டியின் உரித்து கையேற்கப்படாமல் பழுதுபார்த்தலுக்காக ரூபா 1,250,427 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் நோயாளர் காவும் வண்டி நோக்க இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | நோயாளர் காவும் வண்டியை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களின் உரித்தை சபைக்கு கையேற்று இலக்கிடப்பட்ட பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 1956 ஆம் ஆண்டின் போது அப்புத்தலை பிரதேச சபைக்குரிய ஒரு ஏக்கர் அளவிலான கணிசமான நிலப் பகுதியில் சபைக் கட்டிடமொன்றும், நூலகம் மற்றும் முன்பள்ளி பாடசாலைக் கட்டடம் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணியின் உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | காணியின் சட்ட ரீதியான உரித்து தீர்த்துவைக்கப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் (LDSP) நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 02 கொள்கலன்கள் ரூபா 3,975,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | மீள்சுழற்சி நிலையத்திறகு கழிவுப்பொருட்களை கொண்டுவந்து கையளிப்பதற்கு பிரதேச வாசிகள் ஆர்வம் காட்டியிருக்கவில்லை. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,450,000 ஆன 05 நடமாடும் விற்பனைக் கொட்டகைகள் பயன்படுத்தப்படாமல் பயனற்றுக் காணப்பட்டது. | உரிய கொள்வனவாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடமாடும் விற்பனை கொட்டகைகள் இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) 2016 ஆம் ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி அனுசரணையின் கீழ் புறநெகும செயற்திட்டத்திற்கு இணையாக ரூபா 400 மில்லியன் செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பண்டாரவளை கீழ் ஓய பல்நோக்கு கட்டிடம், நூலகம், வாராந்த சந்தை மற்றும் மலசல கூட முறைமைகள் உத்தேச பணிகளுக்காக பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | பல்நோக்கு கட்டிடமாக பயன்படுத்தப்படுகின்றது. | பொது மக்களின் பணத்தை ஆக்கபூர்வமானதாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 55 மயான நிலங்கள் மற்றும் விளையாட்டு மைதானம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | சொத்துக்களை முறையாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |